# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-1
Date : 07.02.2025
Case No. : **O.S.492/2019**
Nationality : Indian
Name : ரமேஷ்
Religion :
Father's/Husband's Name : தண்டபாணி
Age : 48
Village :
Taluk :

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது உடன்பிறந்த சகோதரர் டி.கார்த்திகேயன் என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனது சகோதரர் கார்த்திகேயன் 05.09.2013 ம் தேதி பிரதிவாதியின் மனைவி சம்சாத்பேகம் என்பவருக்கு எழுதி கொடுத்துள்ள பதிவு செய்யப்பட்ட வரவு ரசீதில் நான் 2 வது சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 05.10.2013 தேதியிட்ட வரவு ரசீதில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் ( மேற்படி வரவு ரசீது சார்பதிவாளர் அலுவலக கணினி சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது) . மேற்படி வரவு ரசீது 4 வது பக்கத்தில் கிரய உடன்படிக்கையில் கண்ட சரத்துக்கள் அனைத்தும் 04.11.2011 தேதிய கிரய உடன்படிக்கை ஆவணத்தில் கண்ட சரத்துக்களே ஆகும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 04.11.2011 தேதியிட்ட விற்பனை உடன்படிக்கைதான் மேற்படி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி

தற்போது தாமாக அந்த ஆவணம் பற்றி எனக்கு புரியவில்லை என்று கூறுகிறார். மேற்படி 04.11.2011 தேதியிட்ட விற்பனை உடன்படிக்கை ஆவணத்தின் அடிப்படையில்தான் பிசாஆ 1 வரவு ரசீது எழுதப்பட்டுள்ளது என்றாலும் வரவு ரசீதில் நான் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்போது எனக்கு தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. மேற்படி வரவு ரசீதில் காணப்பட்டுள்ள 04.11.2011 தேதிய ஆவணத்தில் பக்கம் 3 ல் சொத்தின் சுவாதீனம் 2ம் நபர் சம்சாத்பேகம் என்பவர் வசம் இருந்து வருகிறது என எழுதப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சுவாதீனம் ஒருபோது எனது அனுபவத்தில் இல்லை என்றாலும் நானும் எனது சகோதரரும் சேர்ந்து கொண்டு பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.02.08 09:51:23 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.